**செய்தி வெளியீடு எண்: 223** **நாள்: 12.04.2013**

## <u>பத்திரிக்கை செய்தி</u>

விழுப்புரம் மாவட்ட திண்டிவனத்தை சேர்ந்த 12–ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த மாணவன் விநாயகம் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவனை ஆசிரியர் தலையில் அடித்ததின் காரணத்தினால் படுகாயம் அடைந்து மனநிலை பாதிக்கப்பட்டதாக புகார் வந்ததின் அடிப்படையில், அம்மாணவனையும் சம்மந்தப்பட்டவர்களையும் விசாரிக்க ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு (10.04.2013) அன்று விசாரணை நடைபெற்றது.

மாணவனிடமும் மாணவனின் தாய் தந்தையிடமும் மற்றும் மாணவனை பரிசோதனை செய்த மருத்துவர் மற்றும் மருத்துவ தலைமை அதிகாரியிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனநல மருத்துவ நிலையத்தின் துணை இயக்குநர் மற்றும் இயக்குநர் அவர்களையும் விசாரித்து அறியப்பட்டது.

இவ்விசாரணையின்போது ஆணைய தலைவர், இணை இயக்குநர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் உடன் இருந்தனர்.

திண்டிவனத்தில் சம்பந்தப்பட்ட பள்ளியில் சென்று உரிய விசாரணை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.920**